சிறைத்துறை துணைத் தலைவர் சென்னை சரகம் செயல்முறை ஆணைகள்

முன்னிலை . திரு.ஆர்.கனகராஜ், எம்.ஏ, எம்.பில்

எண். 1217/மு௨_/2022

நாள்.09.05.2022

பொருள்.– சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் துறை– தமிழ்நாடு அமைச்சுபணி கருணை அடிப்படையில் பணி நியமனம்– திரு.கா.சரத்குமார் த/பெ காமராஜ் (லேட்) நன்னடத்தை அலுவலர் குடியாத்தம்– சிறைத்துறையில் தந்காலிகமாக இள நிலை உதவியாளராக கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டது–பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை.–
1) அரசாணை (நிலை) எண்48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யு1) துறை நாள் 26.04.2021.
2) காவல்துறை இயக்குநர்/ சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை இயக்குநர் / குறிப்பாணை எண்.17693/இஎஸ்2/2014, நாள்.04.05.2022
3) புழல் மத்திய சிறை–1 கண்காணிப்பாளரின் கடித எண். 5216/பொ.1/2016, நாள்.05.05.2022.

.........

திரு.பி.காமராஜ் என்பவர் குடியாத்தம் நன்னடத்தை அலுவலராக பணிபுரிந்து வந்த நிலையில் 01.03.2003 அன்று மரணமடைந்தார். அவரது மகன் திரு.கா.சரத்குமார் என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் பணி கோரி விண்ணப்பித்திருந்தார். அன்னார் 10–ம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார். அவருடைய பிறந்த தேதி 07.10.1985 கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்வதற்கான நிபந்தனைகளை நிறைவு செய்துள்ளதால் அவரது விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு தற்காலிக இளநிலை உதவியாளராக சிறைத்துறையில் 12.09.2016 முற்பகல் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளார். அன்னாரின் பணியினை அவர் பணி நியமனம் செய்யப்பட்ட நாளான 12.09.2016 முற்பகல் முதல் வரன்முறை செய்ய பார்வை 1ல் காணும் அரசாணை மற்றும் பார்வை 2ல் காணும் காவல்துறை இயக்குநர்/ சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை இயக்குநரின் குறிப்பாணை ஆகியவற்றில் தெரிவித்துள்ள வழிகாட்டுதல்களின் படி மேற்படி பணியாளர் பணியில் சேர்ந்த நாளான 12.09.2016 முற்பகல் முதல் இவரது பணியினை வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

2. இவ்விபரத்தை மேற்படி பணியாளரது பணிப்பதிவேட்டில் பதிவு செய்து விட்டு அதன் விபரத்தினை தெரிவித்திடவும், சிறை கண்காணிப்பாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

சிறைத்துறை துணைத் தலைவர்,
சென்னை சரகம், சென்னை–8

பெறுநர்
திரு.கா.சரத்குமார் இளநிலை உதவியாளர் மத்திய சிறை–1,புழல்.
( புழல் மத்திய சிறை–1, கண்காணிப்பாளர் மூலமாக )
நகல்–கண்காணிப்பாளர், மத்திய சிறை–1,புழல்.
நகல்– காவல்துறை இயக்குநர்/ சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை இயக்குநர்– சென்னை–8.
நகல்–சார் நிலை கருவூல அலுவலர் அம்பத்தூர்.
நகல்– முகாம் உதவியாளர் இருப்புக் கோப்பு.